(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 2(10).]

# பாராளுமன்றத்தின் 2 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2025 செப்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

## 2025 செப்தெம்பர் 23, செவ்வாய்க்கிழமை பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆவது பிரிவின் கீழ், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2025 ஓகத்து 15 ஆம் திகதிய 2449/60 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.09.12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

### (2025 செப்தெம்பர் 24, புதன்கிழமை)

328/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பாதுகாப்பு அமைச்சுக்கென இன்றளவில் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அந்த ஆலோசகர்களின் பணிப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) அத்தகைய ஒவ்வோர் ஆலோசகருக்கும் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், முந்தைய சேவை நிலையம்/ நிலையங்கள், இறுதியாக வகித்துள்ள பதவி, கல்வித் தகைமைகள் மற்றும் 2024 ஆம் ஆண்டளவில் வயது வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) அத்தகைய ஆலோசகர்களுக்கென பணியாட்டொகுதியொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனில், அத்தகைய ஆலோசகர் ஒவ்வொருவரினதும் பணியாட்டொகுதியில் உள்ள பணியாளர்களின் பெயர்கள், அவர்களின் பதவிகள், அவர்களின் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அத்துடன் அப்பணியாளர்கள் இணைக்கப்பட்டிருப்பின், அவர்களின் முந்தைய சேவை நிலையங்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

543/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள ஆலோசகர்களின் மொத்த எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய ஒவ்வோர் ஆலோசகரின் பெயர், நியமிக்கப்பட்ட திகதி, கல்வித் தகைமைகள், செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், முந்தைய சேவை நிலையங்கள் மற்றும் வகித்துள்ள பதவிகள், குறித்த நபருக்கு வாகனம் வழங்கப்பட்டிருப்பின் வாகன இலக்கம், வாகனத்தின் வகை, வாகனத்திற்காக வழங்கப்படுகின்ற மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு, குறித்த நபருக்கு அலுவலகமொன்று வழங்கப்பட்டிருப்பின் அந்த அலுவலகம் அமைந்துள்ள இடம் மற்றும் அந்த அலுவலகத்திற்காகச் செலுத்தப்படுகின்ற மாதாந்த வாடகை ஒவ்வோர் அமைச்சு வாரியாக வெவ்வேறாக யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

545/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி தயாசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பிரதி அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட பணியாட்டொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அப் பிரதி அமைச்சர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பணியாட்டொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், முகவரி, நியமனம் செய்யப்பட்டத் திகதி, செலுத்தப்படும் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அச்சம்பளம் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு வைப்பிடப் படாவிடின், அவை வைப்பிடப்படும் வங்கி, செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகள், அவ்வலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின், அவ் வாகனத்தின் இலக்கம், வாகனத்தின் வகை மற்றும் அவ்வாகனத்திற்காக மாதாந்தம் செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் என்பன ஒவ்வொரு அமைச்சு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

546/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி தயாசேக்கர,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் ஒருவரின் தனிப்பட்ட பணியாட்டொகுதிக்காக அங்கீகரிக்கப்பட்ட அலுவலர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி அமைச்சர்கள் ஒவ்வொருவருடைய தனிப்பட்ட பணியாட்டொகுதிக்கும் நியமனம் செய்யப்பட்ட ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், முகவரி, நியமனம் செய்யப்பட்டத் திகதி, செலுத்தப்படும் மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், அச்சம்பளம் தனிப்பட்ட வங்கிக் கணக்குக்கு வைப்பிடப் படாவிடின், அவை வைப்பிடப்படும் வங்கி, செலுத்தப்படும் ஏனைய கொடுப்பனவுகள், அவ்வலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்கப்பட்டிருப்பின், அவ் வாகனத்தின் இலக்கம், வாகனத்தின் வகை மற்றும் அவ்வாகனத்திற்காக மாதாந்தம் செலுத்தப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் என்பன ஒவ்வொரு அமைச்சு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1298/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு தொழில் வாய்ப்புகளுக்காக சென்றுள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை, அவர்களால் அனுப்பப்பட்ட அந்நிய செலாவணியின் அளவு மற்றும் அவ்வாறு அனுப்பப்பட்ட அந்நிய செலாவணியின் அளவானது இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் வீதமாக ஆண்டுவாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கை தொழிலாளர்களுக்கு அதிக கிராக்கி நிலவும் நாடுகள் யாவையென்பதையும்;

(iii) அத்தேவையைப் பூர்த்திச் செய்வதற்கு அரசாங்கத்திடம் உள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iv) மேலே (ii) இல் குறிப்பிட்ட நாடுகளுக்கு 2020 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை தொழில்வாய்ப்புகளுக்காக சென்றுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(v) இலங்கைத் தொழிலாளர்களுக்கு அதிக நன்மை பயக்கும் ஊழியச் சந்தை காணப்படுகின்ற நாடுகள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி நாடுகளுக்கு அதிக தேர்ச்சிமிக்க இலங்கைத் தொழிலாளர்களை அனுப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 செப்தெம்பர் 26, வெள்ளிக்கிழமை
## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*
விளையாட்டில் ஊக்கு பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2025 ஒக்தோபர் 07, செவ்வாய்க்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1024/2025

கௌரவ சுனில் ரத்னசிரி,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையிலுள்ள பிளாஸ்டிக் உற்பத்தி கைத்தொழிற்சாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இலங்கையில் வருடாந்தம் உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் அளவுகள் வெவ்வேறாக எவ்வளவு;

(iii) பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பாவனையைக் குறைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iv) பிளாஸ்டிக்கினைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் சிறு பிள்ளைகளுக்கான உணவுப் பொதிகளின் தரம் பற்றி கவனம் செலுத்தப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1083/2025

கௌரவ (டாக்டர்) பத்மநாதன் சத்தியலிங்கம்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வன்னிப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் கருங்கல் உடைத்தல் மற்றும் மண் அகழ்வு நடவடிக்கைகளுக்கு மாகாண சபை நிருவாகத்தின் கீழுள்ள எந்தவொரு நிறுவனத்திடமிருந்தும் அனுமதி பெறாமல் நேரடியாக மத்திய அரசாங்கத்தின் கீழுள்ள நிறுவனங்களிடமிருந்தே அனுமதி பெறப்படுகின்றது என்பதையும்;

(ii) மேற்படிச் செயற்பாட்டின்போது தொல்பொருளியல் திணைக்களம், புவிச் சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை, வனப் பாதுகாப்புத் திணைக்களம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் உரிய பிரதேசச் செயலகம் ஆகிய நிறுவனங்கள் தொடர்புபடுகின்றன என்பதையும்;

(iii) அகழ்ந்தெடுக்கப்பட்ட கனிய வளங்களை கொண்டு செல்வதற்கு உள்ளூராட்சி நிறுவனங்களின் நிருவாகத்தின் கீழுள்ள வீதிகளைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களில் மாத்திரம் குறித்த உள்ளூராட்சி நிறுவனத்திடமிருந்து அனுமதி பெறப்படுகின்றது என்பதையும்;

(iv) அதன்படி, வட மாகாணத்தின் வளங்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதியின்றி பிற மாகாணங்களுக்கு கொண்டு செல்லப்படுகின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) வட மாகாணத்தின் வளங்களை, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் அனுமதியின்றி பிற மாகாணங்களுக்கு கொண்டு செல்வதற்கு இடமளிக்கப்படுமா என்பதையும்;

(ii) மேற்படி நிலையைத் தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் மாற்றுத் திட்டம் யாதென்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1090/2025

கௌரவ (பேராசிரியர்) எல்.எம்.அபேவிக்ரம,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தறை, தெலிஜ்ஜவில மத்திய மகா வித்தியாலயத்தில் 17 வகுப்பறைகளும், வேறு முக்கியமான அலுவலகங்களும் இயங்கி வந்த மூன்று மாடிக் கட்டடத்தின் கீழ் தளத்தில் அமைந்துள்ள 02 வகுப்பறைகளுக்கு பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் மண் மேடு சரிந்து விழுந்தமையால் அக்கட்டடம் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளது என்பதையும்;

(ii) அதன் காரணமாக மேற்படி பாடசாலையின் கல்விச் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) கடந்த காலத்தில் மேற்படி கட்டடத்தை மறுசீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) அக்கட்டடத்தை மறுசீரமைப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) சம்பந்தப்பட்ட நிலப்பகுதியைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1102/2025

கௌரவ சுரங்க ரத்நாயக்க,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2025.01.01 ஆம் திகதியளவில் இலங்கையின் வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போதைய அரசாங்கம் பட்டதாரிகளுக்கு வழங்கியுள்ள வேலை வாய்ப்புக்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) மேற்படி வேலை வாய்ப்புக்கள் ஒவ்வொரு துறைவாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கும் எதிர்கால வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இன்றளவில் அரச ஆசிரியர் சேவையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக துரித வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வேலைத்திட்டம் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1114/2025

கௌரவ ரொஷான் அக்மீமன,— வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான திருகோணமலை மாவட்டத்திலுள்ள காணிகளின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி காணிகள் தொடர்பான எதிர்காலத் திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி அதிகாரசபைக்குச் சொந்தமான காணியொன்று Sweet Bay பிரதேசத்தில் காணப்படுகின்றதா என்பதையும்;

(iv) அக்காணியின் பரப்பளவு யாதென்பதையும்;

(v) மேற்படி காணியில் அனுமதியின்றி வேலியொன்றை நிர்மாணித்து பலவந்தமாக நிலைகொண்டுள்ள கம்பனி யாதென்பதையும்;

(vi) மேற்படி காணி தொடர்பில் மேற்குறிப்பிட்ட கம்பனிக்கு உரிமை காணப்படுகின்றதா என்பதையும்;

(vii) இன்றேல், குறித்த கம்பனிக்கெதிராக மேற்கொள்ளப்படும் சட்டரீதியான நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1161/2025

கௌரவ துரைராசா ரவிகரன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முல்லைத்தீவு மற்றும் மன்னார் பொது வைத்தியசாலைகளில் மருத்துவர் களுக்கான உள்ளகப் பயிற்சி அளிக்கப்படாததை அறிவாரா என்பதையும்;

(ii) அநேகமான ஆதார வைத்தியசாலைகளில் மருத்துவப் பேரவையால் அங்கீகரிக்கப்பட்ட நான்கிற்கும் மேற்பட்ட நிபுணத்துவ மருத்துவர்கள் பணியாற்றுகின்றபோதும், முல்லைத்தீவு மற்றும் மன்னார் பொது வைத்தியசாலைகளில் நிபுணத்துவ மருத்துவர்களுக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) போதிய வளங்கள் இல்லாதிருப்பதால் நோயாளர்களை பூர்வாங்க மருத்துவப் பரிசோதனைகளையும் மருத்துவ ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதற்காக பிற மாவட்ட வைத்தியசாலைகளுக்கு அனுப்புவதன் காரணமாக அரசாங்க மருத்துவச் சேவையின் இயல்திறன் இன்மையும் ஏற்றத்தாழ்வும் நிரூபணமாவதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகள் அடங்கலாக, இலங்கையிலுள்ள அனைத்து மாவட்ட வைத்தியசாலைகளுக்கும் போதுமான பணியாட்டொகுதி மற்றும் பௌதீக வளங்கள் இருப்பதை உறுதிசெய்வதற்காக கொள்கை ரீதியான முடிவு எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன்?

1251/2025

கௌரவ அஜந்த கம்மெத்தெகே,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள குளங்கள் மற்றும் ஆறுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும் குளங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் பராமரிக்கப்படும், மாத்தறை மாவட்டத்திலுள்ள குளங்கள், ஆறுகள் மற்றும் கால்வாய்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மாத்தறை மற்றும் திஹகொடை பிரதேச செயலகப் பிரிவுகளில், நில்வலா ஆற்றுப்படுகைக்கு அண்டியதாக நீர்ப்பாசனத்துக்கான ஒதுக்கங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(v) அவற்றை வேறு தரப்பினர் கையகப்படுத்தியுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(vi) ஆமெனில், அதற்கெதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) திஹகொடை பிரதேச செயலகப் பிரிவின், நாதுகல கிராம அலுவலர் பிரிவில் நில்வலா ஆற்றுத் திட்டத்திற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள காணியின் அளவு யாதென்பதையும்;

(ii) அதற்கான இழப்பீடுகள் வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) இழப்பீடுகளை பெற்றுக்கொண்ட ஆட்கள் மேற்படி காணிகளை வேறு தரப்பினருக்கு விற்றுள்ளமையை அறிவாரா என்பதையும்;

(iv) நில்வலா ஆறு சார்ந்த கருத்திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(v) இன்றேல், சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீண்டும் அதன் ஆரம்ப உரிமையாளர் களுக்கு வழங்கப்படுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1282/2025

கௌரவ தனுஷ்க ரங்கனாத்,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) களுத்துறை மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு உரித்தான சகல காணிகளும் திட்டவட்டமாக வெவ்வேறாக அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றுள் தற்பொழுது பயன்படுத்தப்படாத, எனினும் 1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு சட்டத்திற்கமைய பயன்பாட்டிற்கு எடுக்கக் கூடிய இயலுமையுள்ள காணிகளின் அளவு மற்றும் அவற்றின் தற்போதைய உரித்தின் தன்மை ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிற்கமைய வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி காணிகள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) களுத்துறை மாவட்டத்தில், ஆணைக்குழுவிற்கு உரித்தான சகல காணிகளுக்கும் உரித்துப் பத்திரங்கள் மற்றும் வரைபடங்கள் (plans) வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் செல்லுபடியாகும் காலம் எவ்வளவு என்பதையும்;

(iii) காணியற்ற அல்லது மீளக் குடியமர்த்தும் நபர்களுக்கு ஆணைக்குழுவின் காணிகளை விடுவிக்க முடியுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்குரியதான நடைமுறை யாதென்பதையும்;

(v) குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள ஆணைக்குழுவின் காணிகள், குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படவில்லையெனில், மீள கையகப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1306/2025

கௌரவ சானக மாதுகொட,— நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்தில் தற்போது கடுமையான குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுவதை அறிவாரா;

(ii) அந்த குடிநீர்த் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

(iii) கடந்த அரசாங்கத்தால் காலி, வக்வெல்ல நீர்ப்பம்பி நிலையத்தில் 50,000 கன லீற்றர் நீர்க் கொள்ளளவு கொண்ட நீர்த்தாங்கி ஒன்றை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டதை அறிவாரா;

(iv) அந்த நீர்த்தாங்கியின் நிர்மாணப் பணிகள் இடைநடுவே நின்றுவிடச் செல்வாக்குச் செலுத்திய காரணங்கள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1329/2025

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனராகலை மாவட்டத்திலுள்ள பிரதேச ஆயுர்வேத வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவ்வைத்தியசாலைகள் மூலம் பிரதேச மக்களுக்கு பாரிய சேவை ஆற்றப்பட்டு வருவதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iii) இன்றளவில் மேற்படி வைத்தியசாலைகளில் நிலவும் ஊழியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலைகளை மேலும் அபிவிருத்திச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2025 ஒக்தோபர் 08, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

1180/2025

கௌரவ சிவஞானம் ஸ்ரீதரன்,— வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிளிநொச்சி நகர மத்தியில் சதொச விற்பனை நிலையம் அமைந்துள்ள கட்டடம் உரிய அங்கீகாரமின்றி நிர்மாணிக்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) நிர்மாணப் பணிகளுக்குரிய அங்கீகாரம் கரைச்சி பிரதேச சபையிடமிருந்து உரிய முறையில் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) மேற்படி கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு அரச நிதி செலவிடப்பட்டிருக்குமானால், அதன் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட விலைமனுக் கோரல் பற்றிய விபரங்கள் யாவை என்பதையும்;

(iv) நிர்மாணப் பணிகளுக்கு செலவிடப்பட்ட தொகை எத்தனை மில்லியன் ரூபாய் என்பதையும்;

(v) மேற்படி கட்டடத்தின் தற்போதைய உரிமையாளர் யாரென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கட்டடம் அமைந்துள்ள காணியின் உரித்தைக் கொண்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்படி காணி நீண்ட காலக் குத்தகைக்கு யாதேனுமொரு தரப்புக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1235/2025

கௌரவ லெப்டினன் கமாண்டர் (ஓய்வு பெற்ற) பிரகீத் மதுரங்க,— பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் முப்படைகளில் பணியாற்றி, லீவு பெற்றுக் கொள்ளாது பல்வேறு காரணங்கள் நிமித்தம் தொழிலைக் கைவிட்டு வெளிநாடு சென்றுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை மற்றும் ஏனைய உத்தியோகபூர்வ அங்கத்தவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக இவர்கள் வெளிநாடு சென்று பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு வருவதால் இன்றளவில் இலங்கைக்கு பெருமளவான வெளிநாட்டுச் செலவாணியை ஈட்டித் தருகின்றமையை ஏற்றுக்கொள்வாரா;

(iii) இவர்கள் சட்டரீதியாக இராணுவச் சேவையிலிருந்து விலகாத காரணத்தினால், மீண்டும் இலங்கைக்கு வரும்போது கைது செய்யப்படுவார்கள் என்பதை அறிவாரா;

(iv) அவ்வாறு கைது செய்யப்படும் முப்படையினர் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

(v) இவர்களை சட்டரீதியாக இராணுவ சேவையிலிருந்து விலக்குவதற்கு எடுக்கும் காலத்தைக் குறைத்துக் கொள்வதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1258/2025

கௌரவ தர்மப்பிரிய திசாநாயக்க,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சிறைச்சாலைகளில் இன்றளவில் எத்தனை சிறைக்கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி சிறைக்கைதிகளுள் 20 ஆண்டுகள் தடுத்துவைக்கப்பட்டதன் பின்னர் விடுவிக்கப்படவுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) 20 ஆண்டுகால சிறைத்தண்டனை நிறைவடைந்த பின்னர் அச்சிறைக்கைதிகள் விடுவிக்கப்படுவார்களா என்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சிறைக்கைதிகளைத் தவிர அபராதம் செலுத்த முடியாமல் நீண்ட காலமாக சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அவர்களின் விடயத்தில் நியாயமான மற்றும் முறையான வழிமுறையொன்று பின்பற்றப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அவ்வழிமுறை யாதென்பதையும்;

(iv) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

மேலும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1271/2025

கௌரவ சுதத் பலகல்ல,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹியங்கனை பிரதேச சபையினால் நிருவகிக்கப்பட்ட வாராந்த சந்தையை அகற்றி அந்த இடத்தில் வர்த்தகக் கட்டிடத் தொகுதியொன்று நிர்மாணிக்கப் பட்டுள்ளமையை அறிவாரா;

(ii) மேற்படி வர்த்தகக் கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கு ஏதுவாக அமைந்த காரணிகள் யாவை;

(iii) மேற்படி வர்த்தகக் கட்டிடத் தொகுதியின் வர்த்தகக் கூடங்கள் பகிரப்பட்டுள்ள அடிப்படை யாது;

(iv) மேற்படி வர்த்தகக் கூடத்தைப் பெற்றுக்கொண்டுள்ள ஒவ்வொரு நபரினதும் பெயர், பெற்றுக்கொண்டுள்ள வர்த்தகக் கூடங்களின் எண்ணிக்கை மற்றும் பிரதேச சபைக்கு செலுத்தப்படும் மாதாந்த வாடகை ஆகியன வெவ்வேறாக யாது;

(v) வர்த்தகக் கூடங்களை பெற்றுக்கொண்டுள்ள நபர்களுடன் மேற்கொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தத்தின் பிரகாரம், மேற்படி வர்த்தகத் தொகுதியின் முழு உரிமையும் குறிப்பிட்ட பிரதேச சபைக்கு உரித்தாகும் திகதி யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1314/2025

கௌரவ கே.காதர் மஸ்தான்,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள 102 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில், நிரந்தர கிராம உத்தியோகத்தர் அலுவலகமொன்றைக் கொண்டிராத கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் தற்காலிக கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களைக் கொண்டு இயங்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) வவுனியா மாவட்டத்தில் காணப்படும் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களில் தற்போது புனரமைக்க வேண்டிய நிலையில் காணப்படுகின்ற மற்றும் மலசலகூட வசதி, நீர் வசதி மற்றும் மின்சார வசதி காணப்படாத மற்றும் இன்றளவில் மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள கிராம உத்தியோகத்தர் அலுவலகங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) மேற்படி பிரச்சினைகள் காரணமாக குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர்களுக்கு உரிய முறையில் தமது சேவைகளை வழங்க முடியாதுள்ளமையை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஒக்தோபர் 09, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

18/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காங்கேசன்துறையில் அமைந்துள்ள இரு எண்ணெய் தாங்கிகளும் குழாய் அமைப்பொன்றும் உள்ளதென்பதை அறிவாரா;

(ii) மேற்படி இரு எண்ணெய் தாங்கிகளையும் குழாய் அமைப்பினையும் பயன்படுத்தும் அரச நிறுவனங்கள் யாவை;

(iii) மேற்படி இரு எண்ணெய் தாங்கிகளையும் குழாய் அமைப்பினையும் பயன்படுத்துவதற்காக சீமெந்து கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்க வேண்டிய பணத்தொகை யாது;

(iv) மேற்படி பணத்தொகையை அறவிடுவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1272/2025

கௌரவ மேஜர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) ஜீ.டி.சூரியபண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் தாபிக்கப்பட்டுள்ள போதனா வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவை தாபிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் யாவை;

(iii) போதனா வைத்தியசாலையொன்றை நிர்மாணிப்பதன் நோக்கங்கள் யாவை;

(iv) அவ் வைத்தியசாலையொன்றில் காணப்பட வேண்டிய முதன்மை வசதிகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சகல போதனா வைத்தியசாலைகளுக்கும் மருத்துவ பீடமொன்று இணைக்கப்பட்டுள்ளதா;

(ii) அவ் ஒவ்வொரு போதனா வைத்தியசாலையிலும் பேராசிரியர் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ளதா;

(iii) பேராசிரியர் பிரிவொன்று தாபிக்கப்பட்டுள்ள மற்றும் தாபிக்கப்படாதுள்ள போதனா வைத்தியசாலைகள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி வைத்தியசாலைகளில் இணைக்கப்பட்டுள்ள மருத்துவ பீடங்கள் வெவ்வேறாக யாவை;

(v) குளியாப்பிட்டிய வைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றுகையில், வயம்ப பல்கலைக்கழக மருத்துவ மாணவர்களின் பிணியாய்வு பயிற்சிக்காக பேராசிரியர் பிரிவொன்றை தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்ததா;

(vi) ஆமெனில், குறிப்பிட்ட பிரிவு எதிர்காலத்தில் தாபிக்கப்படுமா;

(vii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

(viii) குளியாப்பிட்டிய போதனா வைத்தியசாலைக்கு தற்போதைய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள வசதிகள் யாவை;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1284/2025

கௌரவ சட்டத்தரணி சரத் குமார,— பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்திற்கமைய அரச உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வேட்பாளர்களாக போட்டியிட முடியுமா;

(ii) அதற்காக அரசியல் உரித்துடைய அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படுகிறது என்பதையும் அரசியல் உரித்தற்ற அரச உத்தியோகத்தர்கள் பதவி விலக வேண்டும் என்பதையும் அறிவாரா;

(iii) உள்ளூராட்சி மன்றமொன்றில் நகரபிதா/தவிசாளர் பதவிக்கு அரச உத்தியோகத்தர் ஒருவர் தெரிவு செய்யப்பட்டால், அப்பதவியில் இருக்கும் காலப்பகுதியினுள் அவர் தேர்தலுக்கு முன்பு ஈடுபட்ட அரச உத்தியோகத்தில் ஈடுபட முடியுமா;

(iv) அதற்குரியதான சட்ட நிலைமை யாது;

(v) 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது, மடுல்ல மற்றும் சியம்பலாண்டுவ பிரதேச சபைகளின் தவிசாளர்கள் தமது தவிசாளர் பதவியை வகித்த காலப் பகுதியினுள், தவிசாளர் பதவிக்குரிய சம்பளத்தையும், அரச உத்தியோகத்திற்கான சம்பளத்தையும் என இரண்டையும் பெற்றுக்கொண்டார்கள் என்பதை அறிவாரா;

(vi) அதற்கான சட்ட உரித்து அவர்களுக்கு உள்ளதா;

(vii) அவர்கள் இரண்டு சம்பளங்களையும் பெற்றுக்கொண்டுள்ளார்கள் எனில், அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(viii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1285/2025

கௌரவ ஆர்.எம். சமந்த ரணசிங்ஹ,— போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கேகாலை மாவட்டத்திலுள்ள புகையிரத நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவை யாவை என்பதையும்;

(iii) மேற்படி புகையிரத நிலையங்களை அபிவிருத்திச் செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) கேகாலை மாவட்டத்திலுள்ள புகையிரத வீதியில் மண்சரிவு ஏற்படக்கூடிய அபாயத்துக்குரிய இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக வழங்கப்பட்டுள்ள தீர்வுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1286/2025

கௌரவ திலங்க யூ. கமகே,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) காலி மாவட்டத்திலுள்ள மத்திய அரசுக்கும் மாகாண சபைக்கும் சொந்தமான வைத்தியசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வைத்தியசாலையின் பெயர், தரவரிசைப்படுத்தலுக்கு அமைவாக வைத்தியசாலை வகை என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) பத்தேகம மாவட்ட வைத்தியசாலையின் தற்போதைய நிலைமை குறித்து ஆராயப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையிலுள்ள பிராந்திய சுகாதார நிலையங்களின் தற்போதைய நிலைமை குறித்த தரவுகளும் தகவல் தளமொன்றும் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிலையங்களின் தற்போதைய நிலைமை பற்றிய புரிதல் உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1296/2025

கௌரவ நிமல் பலிஹேன,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அனுராதபுரம், பஹல யாங் ஓயா கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்திற்கான நிதி மூலம் யாதென்பதையும்;

(iii) ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iv) கருத்திட்டத்தின் மூலம் பயனடையும் பிரதேசங்கள் யாவையென்பதையும்;

(v) கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர், சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(vi) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(vii) எத்திகதியில் மேற்படி கருத்திட்டம் நிறைவு செய்யப்படவுள்ளது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள குடும்பங்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களுக்குச் சொந்தமான காணியின் அளவு வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி குடும்பங்களை குடியமர்த்துவதற்கு தேவையான காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்காணிகள் யாவையென்பதையும்;

(iv) இடம்பெயரும் குடும்பங்களை அகற்றும் வழிமுறை யாதென்பதையும்;

(v) இடம்பெயர்ந்துள்ள போதிலும், இதுவரை இழப்பீடு வழங்கப்படாத குடும்பங்கள் காணப்படுகின்றனவா என்பதையும்;

(vi) அவர்களுக்கான இழப்பீட்டை வழங்குவதில் தாமதம் நிலவுவதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1307/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பச்சைத் தேயிலைக் கொழுந்து உற்பத்தி குறைந்துள்ளமை தேயிலைக் கைத்தொழில் சார்ந்த பிரதானமானதொரு பிரச்சனை என்பதையும்;

(ii) நீண்ட காலமாக தேயிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்ட காரணத்தினால் தேயிலைக் காணிகளின் மண் வளமற்றுப் போயுள்ளமை மற்றும் மண்ணில் அமிலத்தன்மை அதிகரித்துள்ளமை இதற்கு தாக்கம் செலுத்தியுள்ளதென்பதையும்;

(iii) மூங்கிலை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படுகின்ற உயிர் கரியை (Bio Char-coal) பயன்படுத்துவதன் மூலம் தேயிலைக் காணிகளை நீண்ட காலத்துக்கு வளப்படுத்த முடியுமென தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் மற்றும் பல்கலைக்கழகங்களினால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(iv) பயன்படுத்தும் உரத்தின் அளவுக்கு நிகராக உயிர் கரி பயன்பாட்டின் மூலம், அகத்துறிஞ்சக்கூடிய உரத்தின் அளவில் துரித வளர்ச்சி ஏற்படுவதால் தேவையற்ற முறையில் உரம் இடுவதை கட்டுப்படுத்த முடியுமென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) ஆமெனில், அது தொடர்பில் அரசாங்கத்தின் கொள்கை யாதென்பதையும்;

(ii) இந்த விடயம் தொடர்பாக தேயிலைக் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய நிறுவனங்களை இணைத்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1308/2025

கௌரவ சந்தன சூரியஆரச்சி,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அவிசாவளை நகருக்கு அண்மித்ததாக தொல்பொருளியல் திணைக்களத்துக்குச் சொந்தமான அருங்காட்சியகமொன்று உள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) அது நிர்மாணிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) அதற்காக செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) அங்கு பணியாற்றுகின்ற ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவி வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(v) அருங்காட்சியகம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி அரசாங்கத்துக்குரிய காணியா என்பதையும்;

(vi) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி அருங்காட்சியகத்துக்குச் சொந்தமான அருங்காட்சிப் பொருட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி அருங்காட்சிப் பொருட்கள் எந்தெந்த காலத்துக்குரியவை என்பதையும்;

(iii) மேற்படி அருங்காட்சியகம் வருமானம் ஈட்டுகின்றதா என்பதையும்;

(iv) ஆமெனில், திறக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை ஈட்டப்பட்ட வருமானம் ஆண்டுவாரியாக வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1320/2025

கௌரவ (திருமதி) ஏ.எம்.எம்.எம். ரத்வத்தே,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபையினால் தொலைபேசி கம்பனிகளுக்கு மகாவலி - சீ வலயத்தின், தெஹிஅத்தகண்டிய தொகுதியினுள் நிர்மாணிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அதற்காக அரச காணிகள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின், அக்காணிகள் வழங்கப்பட்ட நடைமுறை யாது என்பதையும்;

(iii) தனி நபரொருவருக்கு கையுதிர்க்கப்பட்டுள்ள அரச காணியொன்றில் நிர்மாணிக்கப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கோபுரத்துடன் தொடர்புடைய காணித் துண்டின் பெறுமதிக்கு உரித்துக் கோருவதற்கு சம்பந்தப்பட்ட தனிநபருக்கு ஏதேனும் முறையொன்று உள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நவமெதகம தொகுதியில் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியின் ஒரு பகுதி பௌத்த நிலையமொன்றினை ஆரம்பிப்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி காணித் துண்டின் விஸ்தீரணம் எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்படி பௌத்த நிலையத்தின் நிர்மாணத்திற்காக ஒதுக்கப்பட்ட காணித் துண்டுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்ட டயலொக் நிறுவனத்தின் தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு ஏதுவான குத்தகைப் பணம் முறையாக அறவிடப்பட்டுள்ளதா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1321/2025

கௌரவ சுகத் வசந்த த சில்வா,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாற்றுத்திறனாளி மாணவர்கள் கல்வி பயிலும் விசேட பாடசாலைகளின் எண்ணிக்கை;

(ii) அங்கு கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை அவர்களது மாற்றுத்திறனின் அடிப்படையில் வெவ்வேறாக;

(iii) மேற்படி விசேட பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(iv) அவற்றில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை;

(v) இலங்கையில் உள்ள விசேட கல்வி அலகுகளின் எண்ணிக்கை;

(vi) அவற்றில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை அவர்களது மாற்றுத்திறனின் அடிப்படையில் வெவ்வேறாக;

(vii) அவ்வலகுகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை;

(viii) அவற்றில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களின் எண்ணிக்கை;

எத்தனை என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) விசேட கல்விக்கான ஆசிரிய நியமனம் பெற்று வேறு பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) மேற்படி ஆசிரியர்களை விசேட கல்வித் துறையினுள்ளேயே சேவையில் ஈடுபடுத்துவதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை;

(iii) விசேட கல்வி ஆசிரியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றதா;

(iv) அவற்றை நடத்தும் நிறுவனங்கள் யாவை;

(v) விசேட கல்விக்குரியதான சட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் யாவை;

(vi) முன்மொழியப்பட்டுள்ள புதிய கல்விச் சீர்திருத்தத்தில் விசேட கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகள் மற்றும் கொள்கை ரீதியான தீர்மானங்கள் யாவை;

என்பதையும் அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2025 ஒக்தோபர் 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

116/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த நல்லாட்சி அரசாங்கக் காலத்தில் இடம்பெற்ற மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பான சம்பவம் சமூகத்தில் பெரும் பேசுபொருளாக இருந்தமையை அறிவாரா என்பதையும்;

(ii) அவ்விடயம் தொடர்பாக விசாரணை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் மூலம் குற்றம் சுமத்தப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி பிணைமுறி மோசடி காரணமாக இலங்கையின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்ட தாக்கம் யாதென்பதையும்;

(iv) மேற்குறிப்பிட்ட பிணைமுறி மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்படும் எதிர்கால நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

205/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இன்று வரை இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு மற்றும் அதன் நிதிசார் பெறுமதி ஆண்டுவாரியாக தனித்தனியே யாது;

(ii) பிற நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பு குறைந்த மட்டத்தில் காணப்படுவதற்கான காரணங்கள் யாவை;

(iii) இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் விவசாயத்துறையின் பங்களிப்பை மேம்படுத்துவதற்காக அமுல்படுத்தப்படுகின்ற வேலைத்திட்டம் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

228/2024

கௌரவ அஜித் பி. பெரேரா,— நீதி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழல் ஒழிப்பு தொடர்பாக கொழும்பில் இயங்கும் வகையில் தாபிக்கப்பட்டுள்ள மூவரடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்றம் தாபிக்கப்பட்ட சட்டம் யாதென்பதையும்;

(ii) மேற்படி நீதிமன்றத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி நீதிமன்றத்தில் தற்போது விசாரணை செய்யும் வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் மேற்படி நீதிமன்றத்தில் விசாரணைசெய்து நிறைவு செய்துள்ள வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iv) ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் இதுவரையில் மேற்படி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) ஊழல் ஒழிப்பு மூவரடங்கிய நிரந்தர நீதாய மேல் நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல் மற்றும் நடாத்திச்செல்லுதல் செயலிழந்துள்ளதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(ii) இலஞ்சம், நிதிக் குற்றங்கள் மற்றும் நிதி மோசடி வழக்குகளைத் துரிதமாக விசாரணை செய்து நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

552/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— டிஜிட்டல் பொருளாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைப் பிரசைகளுக்காக டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படுமா என்பதையும்;

(ii) டிஜிட்டல் அடையாள அட்டையைப் பயன்படுத்துவதன் நன்மைகள் யாவை என்பதையும்;

(iii) அந்த அடையாள அட்டையைத் தயாரிப்பதன் செயன்முறை யாது என்பதையும்;

(iv) ஒரு அடையாள அட்டையைத் தயாரிப்பதற்குச் செலவாகும் தொகை எவ்வளவு என்பதையும்;

(v) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள அனைத்து இலங்கைப் பிரசைகளுக்கும் அந்த அடையாள அட்டையைத் தயாரிப்பதற்குச் செலவாகும் மொத்தத் தொகை எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) டிஜிட்டல் அடையாள அட்டை அறிமுகப்படுத்தப்படுவதற்கு நிதி பெறப்படும் விதம் யாதென்பதையும்;

(ii) அதற்காக வெளிநாட்டுக் கடன் அல்லது உதவி பெறப்படுமாயின், அக்கடன்/ உதவியை வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) அந்த அடையாள அட்டையைத் தயாரிக்கும் செயன்முறையில் முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் அனுகூலங்கள் யாவை என்பதையும்;

(iv) அந்த முதலீட்டாளர்களால் தனிப்பட்டவர்களின் தரவுகளைப் பெற முடியாது என்பது உறுதியளிக்கப்படுமா என்பதையும்;

(v) டிஜிட்டல் அடையாள அட்டையைத் தயாரிக்கும் செயன்முறை தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களும் சபையில் சமர்ப்பிக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

315/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையில் —

(i) 2024.12.31 அன்றுள்ளவாறாக மொத்தப் படுகடன் தொகை இலங்கை ரூபாவிலும் ஐக்கிய அமெரிக்க டொலர்களிலும் யாதென்பதை வெவ்வேறாகவும்;

(ii) 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிற்குமான மொத்தப் படுகடன் தொகை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(iii) 2024.12.31 அன்றுள்ளவாறாக மொத்தப் படுகடன் தொகையில் உள்நாட்டுப் படுகடன் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் என்பவற்றின் விபரங்கள் யாவையென்பதை வெவ்வேறாகவும்;

(iv) பல்தரப்புக் கடன், இருதரப்புக் கடன், தேசிய அரசாங்கத்தின் பன்னாட்டுக் கடன் மற்றும் வணிகக் கடன் என வகைப்படுத்தப்பட்டு 2024.12.31 அன்றுள்ளவாறாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் விபரங்கள் யாவையென்பதையும்;

(v) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் வெளிநாட்டுப் படுகடன் தொகை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(vi) 2024.12.31 அன்றுள்ளவாறாக மொத்தப் பல்தரப்புக் கடன் தொகை யாதென்பதையும்;

(vii) உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கி மற்றும் எலய்ட் ஐரிஷ் வங்கி ஆகியவற்றின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை பல்தரப்புக் கடன் தொகை யாதென்பதை வெவ்வேறாகவும்;

(viii) 2024.12.31 அன்றுள்ளவாறாக மொத்த இருதரப்புக் கடன் தொகை யாதென்பதையும்;

(ix) 2020 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டிற்குமான மொத்த இருதரப்புக் கடன் தொகை யாதென்பதை வெவ்வேறாகவும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

342/2025

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சம்மாந்துறை, கல்முனை, பொத்துவில், ஏறாவூர் மற்றும் மருதமுனை ஆகிய பிரதேசங்களில் Privelth Global (Pvt.) Ltd. எனும் பெயரில் நிதி நிறுவனமொன்று 2014.02.05 காலப்பகுதியில் நடாத்தப்பட்டதென்பதையும்;

(ii) மேற்படி நிதி நிறுவனத்தின் பணிப்பாளர்களாக பணியாற்றிய அஹமட் ஷெரீம் முஹம்மது சிஹாப் (சிஹாப் ஷெரீம்) மற்றும் பாத்திமா பர்சானா மார்கார் ஆகியோரால் 1400 பேரிடம் சுமார் 170 கோடி ரூபாவிற்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) கடந்த டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி இந்தியாவிலிருந்து இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ள இவர்கள் இன்றளவில் காணாமல் போயுள்ளனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேலே (அ) (ii) இல் குறிப்பிடப்பட்டவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இவர்கள் மோசடி செய்துள்ள தொகையை மீள அதன் உரிமையாளர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iii) அது தொடர்பில் பின்பற்றப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iv) இவ்வாறான நிதி நிறுவனங்கள் தொடர்பாக முறையான கண்காணிப்பு மேற்கொண்டு நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

561/2025

கௌரவ ரோஹண பண்டார,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் தற்போது வரை எலிக்காய்ச்சல் (லெப்டொஸ்பைரொசிஸ்) நோயால் பீடிக்கப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை மற்றும் அந்நோய் காரணமாக இறந்த ஆட்களின் எண்ணிக்கை என்பன ஆண்டுவாரியாக தனித்தனியே யாதென்பதையும்;

(ii) எலிக் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

625/2025

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண சபை பாடசாலைகளில் இன்றளவில் கடமையாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை, அந்தப் பாடசாலைகளுக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் அப்பாடசாலைகளில் இன்றளவில் காணப்படுகின்ற பணியாளர்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) தேசிய பாடசாலைகளில் பணியாளர்கள் மிகையாக காணப்படுகையில், மாகாண சபை பாடசாலைகளில் பணியாளர்களுக்கான வெற்றிடங்கள் நிலவுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசாங்கப் பாடசாலைக் கட்டமைப்பினுள் பணியாளர்களை உரிய இடங்களில் பணியமர்த்த மேற்கொள்ளப்படவிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

984/2025

கௌரவ சாமர சம்பத் தசனாயக,— பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் இயங்கிவரும் தேயிலைத் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) இவ்வருடத்திற்குள் சுமார் 225 தேயிலைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதாக தேயிலை சிறு பற்றுநிலங்கள் அதிகார சபையின் தலைவர் கூறியிருப்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iii) மேற்படி கூற்று உண்மையானதா என்பதையும்;

(iv) இலங்கையில் தேயிலை சிறு பற்றுநில உரிமையாளர்களினதும், தேயிலை கைத்தொழிற் துறையினதும் எதிர்காலப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1120/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்கத்தின் முன்னுரிமைப் பணிகளை நிறைவேற்றுவதற்கான ஆற்றலை விருத்தி செய்வதற்காக 1999 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டதாரி பயிலுநர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்களின் பட்டதாரி பயிலுநர் நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டுள்ள திகதி யாதென்பதையும்;

(iii) அத்தகைய நிரந்தரமாக்கலுக்கான அறிவுறுத்தல்களை/சுற்றறிக்கையை வெளியிட்டுள்ள நிறுவனம் யாதென்பதையும்;

(iv) அதன்போது பின்பற்றப்பட்டுள்ள வழிமுறை யாது என்பதையும்;

(v) அத்தகைய அறிவுறுத்தல் கடிதத்தின்/சுற்றறிக்கையின் பிரதியைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(ஆ) (i) மத்திய அரசாங்கத்தின் ஒவ்வோர் நிரல் அமைச்சு, மாகாண அமைச்சு, திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் வாரியாகவும் அத்துடன் ஒவ்வொரு பதவிக்குரிய வகுதி வாரியாகவும் மேற்படி பட்டதாரிகளில் நிரந்தரமாக்கப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(ii) அத்தகைய பதவி வகுதி ஒவ்வொன்றுக்கும் ஏற்புடைய ஆரம்பச் சம்பளம், சம்பள அளவுத் திட்டம் மற்றும் சம்பளக் குறியீட்டு இலக்கம் வெவ்வேறாக யாது என்பதையும்;

(iii) பணி நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னர் மேற்படி பட்டதாரிகளுக்கான சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், அவை எந்த ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதையும்;

(v) அவற்றின் பிரதிகளைச் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(vi) சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்படவில்லை எனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(vii) சேவைப் பிரமாணக் குறிப்பின்படி, பதவி உயர்வு வழங்கும் நடைமுறை யாது என்பதையும்;

அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா. 3/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேசிய விளையாட்டு அணியொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு விளையாட்டுத்துறைக்குரிய ஏதேனும் பட்டப் பாடநெறியைப் பயில்வதற்கு வாய்ப்பினை வழங்குதல்,— இலங்கையில் ஏதேனுமொரு தேசிய விளையாட்டு அணியைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அல்லது தேசிய மட்ட சாதனையைப் படைத்துள்ள விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அவர்களின் அடிப்படை கல்வித் தகைமைகள் அல்லது Z-புள்ளிகளின் மீது அடிப்படையாக அமையாமல் விளையாட்டுத்துறைக்குரிய எந்தவொரு பட்டப் பாடநெறியைப் பயில்வதற்குத் தேவையான சட்ட மற்றும் உயர் கல்விக் கட்டமைப்பை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.4/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் சகல கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றுதல்,— இலங்கையின் கல்வித் தரத்தை முன்னேற்றமடைந்த சர்வதேச மட்டத்துக்குக் கொண்டுவருவதன் பொருட்டு பாடசாலைக் கட்டமைப்பைச் சேர்ந்த சகல ஆசிரியர்களையும் பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களாக மாற்றியமைக்க வேண்டியுள்ளதாலும், தற்போது பெரும்பாலான ஆசிரியர்களுக்கு மூன்றாண்டு கால கோட்பாட்டு மற்றும் செய்முறை ரீதியான பாடநெறியின் இறுதியில் உயர் டிப்ளோமா கிடைப்பதாலும், மூன்றாண்டு கால கோட்பாட்டு ரீதியான பாடநெறி மற்றும் பாடசாலையை மையப்படுத்திய ஓராண்டு கால பயிற்சியுடன்கூடிய நான்காண்டு கால பட்டப்படிப்பு பாடநெறியை அளிப்பதற்கேற்ற வகையில் தற்போது இயங்கி வரும் 19 கல்வியியற் கல்லூரிகளையும் பல்கலைக்கழக பீடங்களாக மாற்றியமைப்பதற்கு அப்போதைய கல்வி அமைச்சரினால் 2020 பெப்ரவரி 13 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்ட அமைச்சரவை தீர்மானத்தை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.5/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தேன் கைத்தொழிலை மேம்படுத்தல்,— மிகத் தரமான மருத்துவ குணமிக்க, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தையில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள தேன் கைத்தொழிலை உள்நாட்டில் மேம்படுத்துவதற்கு துரித வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் உருவாக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 6/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடித்தல்,— இலங்கை புகையிரத திணைக்களத்திற்கு அதிகூடிய வருமானத்தை ஈட்டித்தருகின்ற புகையிரதப் பாதையாக களனிவெளி புகையிரதப் பாதை கருதப்படுவதாலும், இப் புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதனால் இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, பதுளை உள்ளிட்ட பல மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் அதன் நன்மைகளை அனுபவிக்க முடியுமென்பதாலும், களனிவெளி புகையிரதப் பாதையை இரத்தினபுரி வரை நீடிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 7/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லல்,— ருவன்புர அதிவேக நெடுஞ்சாலையை நிர்மாணிப்பதன் நன்மைகள் இரத்தினபுரி மாவட்டத்திற்கு மாத்திரமன்றி பதுளை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களின் மக்களுக்கும் கிடைக்கப்படுவதால் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில்கூட அதிகமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடிய இக்கருத்திட்டத்தினை கட்டம் கட்டமாகவேனும் நடைமுறைப் படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 8/ 2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தினை கற்றல், கற்பித்தல் செயன்முறையுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது, சுவையூட்டிகள் மற்றும் கலத்தல் கலை, சமையல் கலை, நிறமூட்டிக் கலை, உணவு வெட்டும் கலை உள்ளிட்ட பல அம்சங்களைக் கொண்டுள்ளதால், இலங்கையின் உணவுக் கலாசாரம் தொடர்பான கற்பித்தலை கற்பித்தல் செயன்முறைகள் ஊடாக எதிர்கால சந்ததிக்கு அளிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே எமது நாட்டின் உணவுக் கலாசாரத்தை விரிவுபடுத்துவதோடு இலங்கையின் அடையாளத்தை உலக அளவில் நிலைநிறுத்துவதற்கு உகந்த வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 9/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— பாடசாலைப் பிள்ளைகளின் பெறுமதியை சமூகமயப்படுத்தல்,— பாடசாலைப் பிள்ளைகள் பெரும்பாலும் தொடர்புறுவோராகிய பெற்றோர், ஆசிரியர்கள், விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வேன் சாரதிகள் போன்ற நபர்களுக்கு பிள்ளைகளின் பெறுமதி தொடர்பாக சமூகவியல் மற்றும் உளவியல் செயன்முறைகள் மூலம் எளிமையான முறையில் தெளிவுபடுத்தி நாட்டினதும் சமூகத்தினதும் எதிர்கால நல்லிருப்புக்காக சமூகச் சவால்களுக்கு மத்தியில் பிள்ளைகளைப் பாதுகாக்க வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் தேசிய மட்டத்திலான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் திட்டமிட்டு செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.10/2024

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.16/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை வெளிநாட்டு சேவைக்கான நியமனங்கள் வழங்கப்படுவதை முறைப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் நற்பெயரை சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் மேலோங்கச் செய்யும் வெளிநாட்டு சேவைக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள அரசியல் நியமனங்கள் காரணமாக அச்சேவையின் தரம் வீழ்ச்சியடைந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமல் போயிருப்பதால் அந்த நிலைமையைத் தவிர்க்கும் வகையில், வெளிநாட்டு சேவைக்காக மேற்கொள்ளப்படும் அனைத்து நியமனங்களையும் போட்டிப் பரீட்சை பெறுபேறுகள் மற்றும் திறமையின் அடிப்படையில் மேற்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 17/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையான பெறுகை முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான டிப்போக்களுக்கு பொருட்கள் மற்றும் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையானதொரு பெறுகை முறையியல் இன்மையே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஊழல் நிலைமைக்கு பிரதான காரணம் என்பதால் இந்நிலைமையைத் தடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான பெறுகை முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.18/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகம் தொடர்பில் பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பாரம்பரிய பல்கலைக்கழக கட்டமைப்புக்கு அப்பால், தொழிற்சந்தை மற்றும் வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பத்தை இலக்காகக் கொண்ட வாழ்க்கைத்தொழில்சார் தொழில்நுட்பவியல் பல்கலைக்கழகத்தின் பாடநெறிகள் குறித்து பாடசாலை மாணவர்களை விழிப்பூட்டுவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.20/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— மாகாண சபைகளுக்குரிய விடயப்பரப்பை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்பத் தயாரித்தல்,— தற்போது மாகாண சபைகளுக்குரிய விடயப் பரப்புக்கள் எவ்வித விஞ்ஞான ரீதியான அடிப்படையுமின்றி ஒதுக்கப்பட்டுள்ளதாலும், அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாலும் இவ்விடயத்தை நிவர்த்தி செய்வதற்காக அவ்விடயப்பரப்புகளை விஞ்ஞான ரீதியான முறையியலுக்கு ஏற்ப ஒதுக்குவதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.21/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கைப் போக்குவரத்து சபையை வலுப்படுத்துவதற்காக உரிய முறையியலொன்றைத் தயாரித்தல்,— இலங்கையின் பொதுப் போக்குவரத்துச் சேவையை வலுப்படுத்துவது அத்தியாவசியமான விடயமாக அமைவதால், இலங்கைப் போக்குவரத்துச் சபையினால் பொருட்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்படும் போது இடம்பெறும் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்காக அரசாங்கம் உரிய முறையியலொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 22/2024

கௌரவ சமிந்த விஜேசிறி,— பால் உற்பத்தியை அதிகரிப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரித்தல்,— வருடாந்தம் பால் இறக்குமதி செய்வதற்காக அதிகளவான அந்நியச் செலாவணி செலவிடப்படுவதால் அதனை தடுக்கும் வகையில் இலங்கையில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 26/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையிலுள்ள விளையாட்டு அமைப்புக்களை அரசியல் மயமாக்கலில் இருந்து விடுபடச் செய்தல்,— விளையாட்டு அமைப்புக்கள் இலங்கையில் பெருமளவில் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன என்பது தெளிவாகப் புலப்படுவதன் காரணமாக, தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட அரசியல்வாதிகள் விளையாட்டு அமைப்புகளில் போட்டியிடுவதிலிருந்தும் தலைமைப் பதவிகளை வகிப்பதிலிருந்தும் தடை செய்யப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 30/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இனங்களின் அல்லது மதங்களின் அடிப்படையில் அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடுவதைத் தடை செய்தல்,— இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு, இனங்களை அல்லது மதங்களை அடிப்படையாகக் கொண்டு அரசியல் கட்சிகளுக்குப் பெயரிடல் தடைசெய்யப்பட வேண்டும் என்றும், இனங்களை அல்லது மதங்களைக் குறிக்கும் பெயர்களைக் கொண்டு தற்போது செயற்படும் அரசியல் கட்சிகளின் பெயர்களிலிருந்து அத்தகைய மாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 31/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கம் தொடர்பில் ஊழியர்களுக்கு 1% வீத இலாபத்தைச் செலுத்துதல்,—அரசாங்கத் தாபனங்களினால் நிர்வகிக்கப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியன வருடாந்தப் பணவீக்க வீதத்தினை விடக் குறைந்தபட்சம் 1% அதிகமான இலாபம் ஊழியர்களுக்கு கிடைப்பதை உறுதிப்படுத்த வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 32/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரஜைகளுக்கு இலவசப் பயண வசதிகள் பெற்றுத்தரல்,— அனைத்து சிரேஷ்ட பிரஜைகளுக்கும் பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் இலவசப் பயண வசதிகள் வழங்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 33/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணச் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபித்தல்,— தாக்குதல், கடத்தல், கற்பழிப்பு, பாலியல் துஷ்பிரயோகம், கொலை மற்றும் நிதி மோசடி உள்ளிட்ட புலம்பெயர்ந்த ஊழியர்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை ஆராய்வதற்கும், ஊழியர்கள் பாதுகாப்பாக இலங்கைக்குத் திருப்புவதற்குத் தேவையான வசதிகளை ஏற்பாடு செய்யவும் மற்றும் அவர்களின் பாதுகாப்புத் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளவும் சட்ட அதிகாரங்களுடன் அலகு ஒன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 34/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தும் தேசிய வேலைத்திட்டத்தை உருவாக்குதல்,— பல்வேறு திறன்களைக் கொண்ட புத்தாக்குனர்களை உலகிற்கு அறிமுகப்படுத்தி அவர்களின் திறன்கள் மற்றும் படைப்புகளை மேம்படுத்துவதற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 35/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் கைத்தொழிலதிபர்களுக்கு வரிச் சலுகை,— சர்வதேச சந்தைக்கான பொருட்களை உற்பத்தி செய்வதில் 75% க்கும் அதிகமான உள்ளூர் மூலப்பொருட்களைப் பயன்படுத்தும் உள்நாட்டுக் கைத்தொழிலதிபர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்பட வேண்டும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 36/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்குரிமையை வழங்குதல்,— வாக்குரிமையை இழந்த பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதனால், பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒவ்வொரு தனிநபரும் வாக்களிப்பதற்கு அனுமதிக்கப்படல் வேண்டும் என்றும், தேர்தல் இடாப்பில் பெயர் உள்ளடக்கப்பட்டதன் பின்னரும் வாக்களிக்காத நபருக்கு அபராதம் விதிக்கப்பட வேண்டும் என்றும், இம்முறையானது அதிக பங்கேற்புமிக்க ஜனநாயகச் செயன்முறையை உருவாக்க உதவும் என்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 39/2025

கௌரவ லால் பிரேமநாத்,— அடிமட்டத்தில் செயற்படும் நாட்டிலுள்ள சகல உள்ளூராட்சி அதிகாரசபைகள் தொடர்பிலும் மக்கள் கொண்டுள்ள அதிருப்தியை தணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,— மக்களுக்கு மிக நெருக்கமான மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களாக காணப்படுகின்ற அடிமட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பிலும் பெரும்பாலும் மக்கள் அதிருப்தியான நிலையில் இருப்பதால் இந்நிறுவனங்கள் தொடர்பாக மேலதிக அவதானம் செலுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 40/2025

கௌரவ ரீ.கே. ஜயசுந்தர,— பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் கட்டமைப்பை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— இலங்கை ஒரு புதிய மறுமலர்ச்சியை நோக்கி நகர்ந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சுற்றுலாத்துறை உள்நாட்டு வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் தாழ்நில மழைக்காடுகளில் உலக மரபுரிமையாக விளங்கும் சிங்கராஜ வனமும், விசேட விலங்குகள் மற்றும் தாவர இனங்கள் செறிந்து காணப்படும் கன்னெலிய காடு மற்றும் ஹினிதும மலையை உள்ளடக்கிய மலைத்தொடரின் (ஹேகொக்) உயிரியல் அமைப்புமுறை வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் விசேட கவனத்தை ஈர்த்துள்ள சூழல் தொகுதியாக உள்ளதாலும், இச் சூழல் அமைப்பு முறையைக் கொண்ட பிட்டிகல, உடுகம, நெலுவை மற்றும் தெனியாய ஆகிய நகரங்கள் அமைந்துள்ள சூழல் தொகுதியை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தி அதனை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 41/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான வேலைத்திட்டத்தைத் தயாரித்தல்,— சமகாலத்தில் இலங்கை கிரிக்கெட் நிறுவனம் சம்பந்தமாக சமூகத்தில் பாரியதொரு சொல்லாடல் உருவாகியுள்ளதாலும், நிறுவனத்தின் நிர்வாகிகள் தெரிவின் போது குறித்தவொரு சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் வசம் கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரம் இருப்பதால் முறைகேடுகள் அதிகளவில் இடம்பெறும் நிறுவனமாக அது மாறியுள்ளதாலும், அந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு கிரிக்கெட் நிறுவனத்தின் யாப்பு உள்ளிட்ட ஆக்க அமைவினை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கைகள் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 42/2025

கௌரவ ருவன் மாபலகம,— பாடசாலைக் கலைத்திட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுக்கவியல் விடயதானங்களை உள்ளடக்குதல்,— இந்நாட்டு மக்கள் எதிர்கொள்கின்ற நாளாந்த பிரச்சினைகளுக்கான முக்கிய காரணமாக அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைச் சட்டம் பற்றிய அறியாமை அடையாளம் காணப்பட்டுள்ளதாலும், சட்டம் பற்றிய அறியாமை சட்டத்தின்முன் குற்றமற்றவராக இருப்பதற்கான விடயமாக அமையாததாலும், பாடசாலைக் கலைத்திட்டம் சிக்கலாக அமைவதை தவிர்த்து 6 ஆம் தரம் தொடக்கம் 11 ஆம் தரம் வரை பாடசாலை மாணவர்களின் குடியுரிமைக் கல்விப் பாடத்திட்டத்தில் நாட்டின் அடிப்படைச் சட்டம் பற்றிய கற்பித்தலை உள்ளடக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 43/2025

கௌரவ ரோஹண பண்டார,— பேராசிரியர் பதவிகள் மற்றும் கலாநிதி பட்டங்களை தவறாக பயன்படுத்துவதை தடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— தற்போது எமது சமூகத்திலுள்ள அநேகமானோர் பேராசிரியர், கலாநிதி போன்ற பதவிகளையும், பெயர்களையும் தவறான முறையில் பயன்படுத்தி வருவதனால், அதனை தடுக்கும் பொருட்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஊடாக வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 44/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பான 2023 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சிபாரிசுகளை அமுல்படுத்தல்,— இலங்கைப் பொருளாதாரத்தின் இதயத்தைப் போன்றுள்ள இலங்கை துறைமுக அதிகாரசபை தொடர்பாக மிக முக்கியமான சிபாரிசுகள் தேசிய கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளதனால் மேற்படி சிபாரிசுகளை அமுல்படுத்த முறையான வேலைத்திட்டம் ஒன்றை அரசாங்கம் தயார் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 45/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— உள்ளூராட்சி மன்றங்களில் மக்கள் சேவைக்காக முறையாக நிதியைப் பயன்படுத்துதல்,— இன்றளவில் அனேகமான உள்ளூராட்சி நிறுவனங்கள் தமது நிதியை உரிய முறையில் செலவிட்டு பொது மக்கள், சுகாதாரம், பொதுச் சேவைகள் மற்றும் வீதி அபிவிருத்தி பணிகளையும் மேற்கொள்ளாது இலாபம் ஈட்டும் நோக்கில் நிலையான வைப்பு கணக்குகளில் வைப்பிலிடுவதாக தகவல் அறியக்கிடைத்துள்ளமையால் இந்நிலையை தடுப்பதற்கு அரசாங்கத்தினால் பொருத்தமான நிகழ்ச்சித்திட்டமொன்று ஒழுங்கமைப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 46/2025

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடத்தை உரிய முறையில் தொழிற்படவைப்பதற்கான வேலைத் திட்டமொன்றைத் தயாரித்தல்,— தேசிய மருந்துகள் தர உத்தரவாத ஆய்வுகூடம் நிறுவப்பட்டு, இன்றளவில் 35 வருடங்கள் கடந்திருப்பதாலும், தற்போது அந்த ஆய்வுகூடம் முறையாக தொழிற்படாததாலும், இறக்குமதி செய்யப்படும் பெருமளவான மருந்துகள் உரிய தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படாத நிலை காணப்படுகின்றமையால், அந்நிலையை தவிர்ப்பதற்காக உரிய வேலைத் திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.47/2025

கௌரவ ரோஹண பண்டார,— விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஆரம்பித்தல்,— நாட்டிலுள்ள விவசாயிகளுக்கான நலன்புரித் திட்டங்களை வகுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்குரியது என்பதாலும், இந்நாட்டின் மக்கள் தொகையில் பெருமளவானோர் விவசாயிகள் என்பதாலும் விவசாயிகளுக்கான காப்புறுதித் திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.48/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒழுங்குபடுத்தலின் கீழ் கொண்டு வருதல்,— மின்சாரம், பெற்றோலியம், எரிபொருள் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்களை ஒழுங்குபடுத்த வேண்டியிருப்பினும், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு ஏற்புடைய சட்டங்கள் திருத்தப்படாத காரணத்தினால், 21 ஆண்டுகளுக்கும் அதிகமாக பெற்றோலியம் மற்றும் நீர் ஆகியவற்றுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் ஒழுங்குபடுத்தப் படாமலிருக்கும் நிலையை மாற்றுவதற்காக ஏற்புடைய சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.49/2025

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையை ஒழுங்குபடுத்துவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— இலங்கையில் எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு உரிமம் அளிக்கும் செயன்முறையானது முறையற்ற வகையில் காணப்படுவதால், அதனை முறைப்படுத்துவதற்கான ஒழுங்குபடுத்தல் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.50/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— பைனஸ் செய்கையால் நீர் மூலங்கள் மற்றும் சூழலுக்கு ஏற்படுகின்ற பாதிப்புக்களைத் தடுப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— விசேடமாக ஊவா மாகாணம் உட்பட மலையகப் பிதேசங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள பைனஸ் செய்கையால் நீர் மூலங்களுக்கும் சூழலுக்கும் ஏற்படும் பாதிப்புகளைக் கருத்திற்கொண்டு, அவற்றை அகற்றி, பயன்தரு உள்நாட்டு பயிர்ச்செய்கைகளை முன்னெடுப்பதற்கான முறையியலொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 51/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகள் பீடத்தினைத் தாபித்தல்,— ஆசிரியர்களுக்குச் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்காகத் தேசிய மொழிகள் பீடம் ஒன்று தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 52/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— நுண் நிதிக் கடன்களைப் பெற்று அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்காக வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— நுண் நிதிக் கடன்களைப் பெற்றுக் கொண்டவர்களுள் பெருமளவானவர்கள் தற்போது அக்கடன்களால் பாதிக்கப்பட்ட நபர்களாக இருப்பதனால், மேற்படி நபர்களுக்கு நியாயத்தை வழங்குவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 53/2025

கௌரவ ஹேஷா விதானகே அங்கும்புர ஆரச்சி,— தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்கும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல், — மக்களுக்கு கேளிக்கையை அளிக்கும் பிரதான கைத்தொழில் துறையாகிய தொலைக்காட்சி நாடகக் கைத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காகவும் மேற்படி கைத்தொழில் துறையை ஒழுங்குறுத்துவதற்காகவும் ஒழுங்குறுகை நிறுவனமொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 54/2025

கௌரவ லால் பிரேமநாத்,— உள்ளூராட்சி மன்றங்களில் பாரியளவில் பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கையெடுத்தல்,— கடந்த காலங்களில் இலங்கை முழுவதுமுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களிலும் பொது நிதியானது பாரியளவில் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் துரித விசாரணைகளை மேற்கொண்டு அதனுடன் தொடர்புடைய சகல அலுவலர்களுக்கும் நிலவும் சட்டத்தின் பிரகாரம் தண்டனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 55/2025

கௌரவ உபுல் கித்சிறி,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய மடுவன்வெல பிரபுமனை (வலவ்வ) முதற்கொண்டு இலங்கையில் புராதன பெறுமதி வாய்ந்த தலங்களைப் பாதுகாத்தல்,— இரத்தினபுரி மாவட்டத்தில் கொலொன்ன பிரதேச செயலகத்திற்குரிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமான மடுவன்வெல பிரபுமனை முதற்கொண்டு இலங்கையில் பெரும் எண்ணிக்கையிலான புராதன பெறுமதி வாய்ந்த தலங்கள் காணப்படுவதாலும், இத்தலங்கள் சுற்றுலா ஈர்ப்பைக் கொண்டுள்ளதாலும், தற்போது இவை கடுமையாக பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுவதாலும், இவற்றின் மரபார்ந்த தொன்மைக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பேணிப் பாதுகாத்து அத்தகைய தலங்களுக்குச் சொந்தமான காணிகளை துரிதமாக அளவை செய்தும் நிர்ணயம் செய்தும் எதிர்கால சந்ததியினருக்காகப் பாதுகாத்து சுற்றுலாக் கைத்தொழிலுக்காகப் பயன்படுத்த அவற்றைப் பாதுகாக்கும் வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 56/2025

கௌரவ உபுல் கித்சிறி,— உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்தல்,— உடவளவை தேசியப் பூங்கா, உடவளவை யானைகள் சரணாலயம், சங்கபால ரஜமகா விகாரை, உடவளவை நீர்த்தேக்கம், செவனகல சீனித் தொழிற்சாலை, செவனகல கரும்பு ஆராய்ச்சி நிலையம், உடவளவை நன்னீர் மீன்பிடி நிலையம் மற்றும் வவுல்பன சுண்ணாம்புக்கல் குகை முதலிய சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடிய இடங்கள் காணப்பட்ட போதிலும், முறையான ஒரு வேலைத்திட்டம் இன்மையாலும் உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு அவற்றின் பெறுமதியைக் கண்டுகளிக்க முடியாதிருப்பதாலும் இரத்தினபுரி மாவட்டத்தின் உடவளவை மற்றும் மொனராகலை மாவட்டத்தின் செவனகல ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கியதாக உடவளவை பிரதேசத்தை சுற்றுலா வலயமாக பிரகடனப்படுத்துவதற்கு அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.57/2025

கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,— “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம் மக்களின் கல்வி, கலாசாரம், தொழில் மற்றும் இனங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் மற்றும் அன்றாட வாழ்வாதாரத்தைப் பூர்த்திசெய்யத் தேவையான ஒரு நிதியம் தற்சமயம் முஸ்லிம் சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் இல்லாமையினாலும், இவ்வாறான தேவைகளுக்காக “பைத்துல்மால்” என்ற பெயரிலான நிதியம் உலகிலுள்ள முஸ்லிம் நாடுகள் மற்றும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழ்கின்ற நாடுகளில் பல ஆண்டுகாலமாக இயங்கிவருவதாலும், இலங்கையில் இவ்வாறானதொரு நிதியம் ஆரம்பிக்கப்படுமானால் அதற்குத் தேவையான நிதியை உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வசிப்பவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியுமென்பதாலும், முஸ்லிம் சமய, கலாச்சார அலுவல்கள் திணைக்களத்தின் கீழ் “இலங்கைப் பைத்துல்மால் நிதியம்” என்ற பெயரில் நிதியமொன்றைத் தாபிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 58/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் (Student Counsellor) ஒருவரை நியமித்தல்,— தற்போது பெரும்பாலான பாடசாலை மாணவர்கள் மத்தியில் பல்வேறு உளவியல் சார்ந்த பின்னடைவுகள் காணப்படுவதனாலும், இந்த நிலைமைகள் அவர்களின் உடல் மற்றும் சமூக இருப்பில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்துவதனாலும், சில சந்தர்ப்பங்களில் பாடசாலைகளுக்கென பாடசாலை உளவள ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ள போதிலும், மேற்படி பதவியில் பாடசாலை ஆசிரியர்களின் வகிபாகமும் உள்ளடங்குவதன் காரணமாக இதன் ஊடாக எதிர்பார்க்கப் படுகின்ற சேவைகள் பயனுறுதிமிக்கவாறு கிடைக்கப்பெறாமையினாலும், சகல பாடசாலை களிலும் உளவள ஆலோசகர் ஒருவரின் அவசியத்தன்மை எழுந்துள்ளதனாலும், பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்தி, தொழில் அபிவிருத்தி மற்றும் தனிநபர் சமூக அபிவிருத்தியின் பொருட்டு ஒவ்வொரு பாடசாலைக்கும் பயிற்றப்பட்ட உளவள ஆலோசகர் ஒருவரை நியமனஞ் செய்யத் தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 59/2025

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— “ரட்டவிருவன்” (புலம்பெயர் வீரர்கள்) என்றழைக்கப்படும் இலங்கையின் புலம்பெயர் தொழிலாளர்களுக்கான ஓய்வூதியத் திட்டமொன்றை வகுத்தல்,— இலங்கையின் தேசியப் பொருளாதாரத்தை உயிரூட்டுவதற்காக புலம்பெயர் தொழிலாளர்களால் வழங்கப்படும் பங்களிப்பு மிகவும் விசேடமானது என்பதனாலும், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் வெளிநாடுகளில் பல வருட காலமாக தொழில் செய்த பின்னர் இலங்கைக்கு மீண்டும் வந்து தமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ்கின்றபோது ஒரு சில சந்தர்ப்பங்களில் மீண்டும் அவர்களுக்கு தொழில் புரிவதற்கான ஆற்றல் இல்லாததன் காரணமாக பல்வேறு சிக்கல்களுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுவதனாலும், அரசாங்கம் அவர்களிடமிருந்து அந்நியச் செலாவணியாக கிடைக்கப் பெறுகின்ற நிதியிலிருந்து குறித்ததொரு சதவீதத்தைப் பயன்படுத்தி ஓய்வூதிய நிதியமொன்றைத் தாபித்து, ஓய்வூதியத் திட்டமொன்றை வகுக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 60/2025

கௌரவ லால் பிரேமநாத்,— இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுத்தல்,— கடந்த காலத்தில் பாடசாலை ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான ஆசிரியர்களைப் பயிற்றுவித்தல், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் உளவள ஆலோசனைக்கான பிரிவொன்றை நிறுவுதல், மாவட்டச் செயலகம் ஒவ்வொன்றிலும் உளவள ஆலோசனைக்கான அலகு ஒன்றை நிறுவுதல், அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களில் உளவள ஆலோசனைக்கான டிப்ளோமா கற்கைநெறிகள், பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் பட்டமேற்படிப்பு கற்கைநெறிகளைப் போதித்தல், மன அழுத்தத்திற்குத் தீர்வுகாண ஒவ்வொரு பிரதான வைத்தியசாலையிலும் உளவியல் மருத்துவப் பிரிவுகளை ஆரம்பித்தல் போன்றவற்றால் இளம் பிள்ளைகள் தற்கொலை செய்துகொள்வதைத் தடுக்க மேற்கொண்ட முயற்சிகள் தோல்வி அடைந்துள்ளதால் அரசியல் அதிகாரத்தார், அரசாங்க அலுவலர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மற்றும் பொதுமக்கள் அத்தகைய செயற்பாடுகளில் தீவிரமாக இடையீடு செய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 61/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— இலங்கையின் பாடசாலைக் கட்டமைப்பிலுள்ள உணவகங்களில் மாணவர்களுக்கு பாதகமான உணவு வகைகளை விற்பனை செய்வதை நிறுத்துவதற்கான வழிமுறையொன்றை உருவாக்குதல்,— இலங்கையின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் பரவலாக கண்டறியப்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளதாலும், நீரிழிவு நோய்க்கு உணவு வகைகளுடன் உணவுப் பழக்கம் மற்றும் உணவு முறை ஏதுவாக உள்ளதாலும், இலங்கையின் பாடசாலை கட்டமைப்பில் அமைந்துள்ள பாடசாலை உணவகங்களில் நீரிழிவு நோய்க்கு காரணமாகவுள்ள சீனி மற்றும் மா கலந்த உணவுகளுடன் பிரைட் ரைஸ், கொத்து, துரித நூடில்ஸ் போன்ற உணவு வகைகள் பெருமளவில் மாணவர்களுக்கு விற்கப்படுவதாலும், எமது நாட்டின் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு நோய் நிலைமையை கட்டுப்படுத்துவதற்கு பாடசாலை உணவகங்களில் விற்கப்பட வேண்டிய உணவு மற்றும் பான வகைகள் தொடர்பாக அரசாங்கம் குறிப்பிட்ட சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 62/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— புகையிரதப் பண்டப் போக்குவரத்தினை வினைத்திறன்மிக்கதாக மாற்றுதல்,— இலங்கையில் புகையிரதச் சேவையானது பண்டப் போக்குவரத்தினை முக்கிய நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளமையாலும், இன்றளவில் புகையிரதச் சேவை அந்நோக்கத்திலிருந்து விலகியுள்ளமையாலும், பண்டங்களை புகையிரதத்தில் ஏற்றிச் செல்வது செலவு குறைந்த முறையாகக் காணப்படுவதனாலும், இதன் நன்மைகள் நாட்டு மக்களுக்கு நேரடியாகக் கிடைக்கப் பெறுவதனாலும், இயலுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் புகையிரத்தின் மூலம் பண்டங்களையும், எரிபொருளையும் ஏற்றிச் செல்வதற்கு அரசாங்கம் உரிய வழிமுறையொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 63/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— தமது உற்பத்திகளை விற்பனை செய்யும்போது விவசாயிகளுக்கு இழைக்கப்படுகின்ற அநீதியை குறைத்தல்,— தமது விவசாய உற்பத்திகளை விற்பனை செய்யும்போது மொத்த மற்றும் சில்லறை வர்த்தகர்கள் மிகவும் குறைந்த விலையை நிர்ணயிப்பதால் இந்நாட்டிலுள்ள விவசாயிகளுக்கு பாரிய அநீதி இழைக்கப்படுவதாலும், இவ்வுற்பத்திகளை வர்த்தகர்களிடமிருந்து நுகர்வோர் கொள்வனவு செய்யும்போது கூடுதல் விலையை செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாலும், ஒரே நேரத்தில் விவசாயிகளுக்கும், நுகர்வோருக்கும் அநீதி இழைக்கப்படுகின்ற இந்நடைமுறையை மாற்றியமைத்து விவசாயிகளுக்கும் நுகர்வோருக்கும் நியாயத்தை வழங்குவதற்காக அரசாங்கம் துரித நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 64/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— முன்பள்ளிக் கல்வியை ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்குதல்,— தற்போது இலங்கையில் அமுலில் உள்ள அனைத்து கல்வி வாய்ப்புகளிலும் முன்பள்ளிக் கல்வி மிக முக்கியமானதும், தீர்க்கமானதுமாக காணப்படுவதால், இலங்கையின் முன்பள்ளிக் கல்வியை ஒரு நிறுவனத்தினூடாக ஒழுங்குறுத்தும் முறையொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 65/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— ஏற்றுமதி உற்பத்தியாளர்களுக்கான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்,— ஏற்றுமதியை இலக்காகக் கொண்டு விவசாய மற்றும் வேறு பொருட்களை உற்பத்திச் செய்கின்ற உற்பத்தியாளர்களுக்கு ஏற்றுமதிச் சந்தைக்குள் நுழைவதற்குப் போதுமானளவு வசதிகள், அறிவு மற்றும் நுழைவு வழிகள் இல்லாத காரணத்தினால், அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் பிரதான அங்கங்களாகிய ஏற்றுமதித் துறையில் ஈடுபட்டுள்ள இளம் முயற்சியாளர்களுக்கு தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 66/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— உயர்தரம் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத் துறைகளுக்கு இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்தல்,— இலங்கையின் பாடசாலைகளில் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் தொழில்நுட்பவியல் ஆகிய பாடத் துறைகளில் உயர் கல்வி கற்கும் மாணவர்களின் இலக்கிய ரசனையை மேம்படுத்துவதற்காக குறித்த துறைகளுக்கு மேலதிகப் பாடமாக இலக்கியப் பாடத்தை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 67/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளை பராமரித்தல்,— வைத்தியசாலையொன்றில் தங்கி சிகிச்சைப் பெறும் நோயாளிகளின் அருகிலிருந்து நாள்முழுவதும் அவர்களைப் பராமரிப்பதற்காக பொறுப்பாளர் ஒருவரை நியமிக்க வேண்டுமென விடுதிக்கு பொறுப்பான அலுவலர் தெரிவிப்பதாலும், அவ்வாறு பராமரிப்பாளர் ஒருவர் இல்லாதபோது கட்டணம் செலுத்தி பராமரிப்பாளர் ஒருவரின் சேவையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படுவதாலும், அத்தகைய பராமரிப்பாளர்கள் நாளொன்றுக்கு ரூ. 3,500 அறவிடுவதாலும், சில நாட்கள் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சைப் பெறவேண்டிய நிலை ஏற்படின் அச்செலவு பெருஞ்சுமையாக இருக்கும் என்பதாலும், வைத்தியசாலைகளில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளின் பாதுகாப்பினையும் மற்றும் பராமரிப்பினையும், வைத்தியசாலையில் சேவையாற்றும் பராமரிப்பாளர்கள் ஊடாக பெற்றுக்கொடுப்பதற்கான வழிமுறை ஒன்றை அரசாங்கம் வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 68/2025

கௌரவ ருவன்திலக்க ஜயகொடி,— காணி உரிமப் பத்திரங்களையுடையோருக்கு, காணி அறுதி உறுதிப் பத்திரங்களை வழங்குதல்,— நாட்டு மக்களில் கணிசமானோர் தமது காணிகளுக்கு உரிமப் பத்திரங்கள் அல்லது ஸ்வர்ண பூமி போன்ற உறுதிகளையே கொண்டிருக்கின்றனர் என்பதால் அவர்களுக்குரிய உறுதிகளை வழங்குவதற்கு சரியான வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 69/2025

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி பைஸர் முஸ்தபா,— இலங்கையின் மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரித்தல்,— வெளிநாட்டு நீதிமன்றக் கட்டமைப்புக்களிலுள்ள பெருமளவான மேல் நிலை நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதுடன் ஒப்பிடும்போது, இலங்கை அரசியலமைப்பில் குறித்துரைக்கப்பட்டுள்ள நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதானது அதை விடக் குறைவாகக் காணப்படுவதால், இலங்கையின் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 67ஆகவும், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 65ஆகவும், மேல்நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை 63ஆகவும், ஓய்வு பெறும் வயதெல்லைகளை அதிகரிப்பதற்குத் தேவையான சட்டரீதியான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 70/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாணத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல்,— இலங்கையில் யாழ்ப்பாண பிரதேசத்தில் சுற்றுலாத்துறைச் சேவைகளை மேம்படுத்தல் மற்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் இந்நாட்டின் சுற்றுலாத்துறை பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும், தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கும், யாழ்ப்பாணத்தை ஒரு உயிர்ப்பான கலாசாரப் பயண முடிவிடமாக மாற்றமுடியுமென்பதால், யாழ்ப்பாணமும் இலங்கையின் வட மாகாணமும் பிரதான கேந்திர இடங்களாக அங்கீகரிப்பதற்கும், உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் பிரதேசத்தின் ஹோட்டல்கள், உணவு விடுதிகள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் இணைப்பை ஏற்படுத்தல், உண்மையான சுற்றுலா அனுபவங்களை மேம்படுத்தல், இலங்கையின் வட மாகாணத்திற்கான சுற்றுலாப் பயணிகளின் வருகையினையும் அவர்களின் திருப்தியையும் அதிகரிப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் இணைப்பு மற்றும் விற்பனையை மேம்படுத்துகின்ற கொள்கைகள் மற்றும் முதலீடுகளுக்காக ஆதரவளிக்கின்ற, பிரதேசத்தில் சுற்றுலா கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிற்பாட்டாளர்களை வலுவூட்டுகின்ற மற்றும் கலாசார மரபுரிமைகளை மேம்படுத்தும் சுற்றுலாத்துறைச் சேவை வணிகத்தை ஊக்குவித்தல் மற்றும் அவற்றுக்கு வசதியளிப்பதன் மூலமும் யாழ்ப்பாணப் பிராந்தியத்தின் சுற்றுலா கைத்தொழிலின் நிலையான அபிவிருத்தி மற்றும் பொருளாதார விருத்தியை மேம்படுத்துகின்ற அரச-தனியார் பங்காண்மையை மேம்படுத்துவதன் மூலமும் 12 முதல் 18 மாதங்களில் நிலைபேறான பொருளாதாரப் பயன்களை அடைந்துகொள்ளும் இலக்கை நோக்காகக் கொண்டு பிராந்தியத்தின் தொழில் மற்றும் வணிக வாய்ப்புகள் மீது அவ்வாறான நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களை கண்காணிப்பதனூடாக யாழ்ப்பாணத்தை மையமாகக்கொண்ட சுற்றுலா தளமொன்றை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 71/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— நிலைபேறான இளைஞர் வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் நிரந்தர விசேட பொருளாதார வலயம் ஒன்றினைத் தாபித்தல்,— ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயமொன்றினைத் தாபித்தலானது அரசாங்கத்தின் பொருளாதார வளர்ச்சியினைத் தூண்டுவதனாலும், உள்நாடு மற்றும் வெளிநாட்டு முதலீட்டினை ஈர்ப்பதனாலும் இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பினை உருவாக்குவதனாலும், அவ்வாறான வலயங்களினைத் தாபிப்பதன் மூலம் அரசாங்கத்தினால் தொழிற்துறை விரிவாக்கத்தினை ஊக்குவிக்கவும், திறன் விருத்தியினை மேம்படுத்தவும் மற்றும் தொழில்முனைவினை ஊக்குவிக்கவும் முடியுமென்பதாலும், இதன்மூலம் வேலைவாய்ப்பின்மையினை நிவர்த்திசெய்து யாழ்ப்பாணத்திலும் வட மாகாணத்திலும் மற்றும் ஒட்டுமொத்த நாட்டிலும் நீண்டகால சமூக-பொருளாதார முன்னேற்றத்தினை ஊக்குவிக்க முடியும் என்பதாலும், நாடு முழுவதிலும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களினை உள்ளடக்கி, யாழ்ப்பாணத்திலும் வடமாகாணத்திலும் ஒரு நிரந்தர விசேட பொருளாதார வலயம் (SEZ) தாபிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.72/2025

கௌரவ கந்தசாமி பிரபு,— பால் உற்பத்தியில் தன்னிறைவினை ஊக்குவித்தல்,— நாடு தற்போது பால் இறக்குமதியில் தங்கியிருப்பது கணிசமான அந்நியச் செலாவணி இழப்புக்கு இட்டுச்செல்வதாலும், சிறந்த இன மாடுகளுக்கான, கால்நடைச் சேவைகளுக்கான, தீவனத்துக்கான மற்றும் உட்கட்டமைப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற பிரச்சினைகளுக்கு விவசாயிகள் முகங்கொடுப்பதாலும், மேலும், இச்சவால்களைத் தீர்ப்பது உணவுப் பாதுகாப்பினை அதிகரித்து, கிராமியத் தொழில்களை உருவாக்கி, இறக்குமதிகளில் தங்கியிருத்தலைக் குறைப்பதாலும், சிறந்த இன மாடுகளுக்கான அணுகல் மற்றும் கால்நடைச் சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும் தீவனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதன் மூலமும் விவசாயிகளுக்கான பயிற்சி மற்றும் உட்கட்டமைப்பினை வலுப்படுத்துவதன் மூலமும் பாற் பண்ணை விவசாயிகளுக்கு ஊக்குவிப்புக்களை வழங்குவதன் மூலமும் அரச – தனியார் பங்காண்மைகளை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தி தொடர்பான ஆய்வினை ஊக்குவிப்பதன் மூலமும் பாலுற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்காக அரசாங்கத்தினால் தேசிய பால் அபிவிருத்திக் கொள்கை அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் பாலுற்பத்தியாளர் குழுக்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதற்காக ஒரு பொறிமுறை உருவாக்கப்பட வேண்டுமெனவும் பாராளுமன்றத்தின் சம்பந்தப்பட்ட குழு இதன் அமுல்படுத்தலைக் கண்காணித்து, மேலதிக நடவடிக்கைகளை விதந்துரைக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 73/2025

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்குச் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகளை வழங்குதல்,— சனத்தொகையில் பெரும்பான்மையானோர் திறந்த இருதய சத்திரசிகிச்சைக்கு உட்படுகின்ற நிலையில், தனியார் துறை ஊழியர்களுக்கு 'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கை நிதியம்' ஆகியவற்றுக்கூடாக இலவச வசதிகள் வழங்கப்படும் வகையிலும் அரசாங்க ஊழியர்களுக்கு அல்லது ஊழியரல்லாதோருக்கு அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தில் இருந்து செலவுக்கான முழுத் தொகையும் வழங்கப்படும் வகையிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் சுகாதாரத்திற்கான சிறந்த வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென இப்பாரளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.74/2025

கௌரவ சமிந்த விஜேசிறி,— வாரத்தின் கடமை நாட்களில் பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை துரிதமாக நடைமுறைப்படுத்தல்,— பிரதான நகரங்களை அண்டியதாக காலை மற்றும் மாலை நேரங்களில் ஏற்படும் கடுமையான போக்குவரத்து நெரிசலுக்குத் தீர்வாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பேருந்து முன்னுரிமைப் பாதை முறையை நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 75/2025

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தை இற்றைப்படுத்தல்,— இத்தாலி - இலங்கை இருதரப்பு சாரதி அனுமதிப்பத்திர ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கையர்களுக்கு ஏராளமான நன்மைகள் கிடைப்பதனால், அந்த ஒப்பந்தத்தை மீண்டும் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 76/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— சூட்டிகை வலுசக்திக் கட்டமைப்பையும் சூட்டிகை மின் மானிகளையும் அறிமுகம் செய்தல்,— ஒரு புதுப்பிக்கத்தக்க வலுசக்தி வடிவமாக சூரிய மின்சக்தி பெறப்படுவதை ஊக்குவித்தல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றபோதும் குறிப்பாக, கூரைகளில் பொருத்தப்படுகின்ற சூரியப் படல்களால் பிறப்பிக்கப்படுகின்ற மின்சாரத்தின் அளவை முறைமைக் கட்டுப்பாட்டு நிலையத்தால் வேறுபடுத்திக் கண்டறிய முடியாததால் தேசிய மின்சாரக் கட்டமைப்பை (Grid) சூட்டிகை நிலைக்கு (Smart Grid) கொண்டு வரவும் சூட்டிகை மின் மானிகளை (Smart Meters) அறிமுகம் செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.77/2025

கௌரவ ரவீந்திர பண்டார,— உணவுகளை சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தீங்கு விளைவிக்கும் செயற்கைச் சுவையூட்டிகளைத் தடைசெய்தல்,— இந்த நாட்டிலுள்ள உணவகங்கள் மற்றும் ஹோட்டல்களில் ரைஸ், கொத்து மற்றும் நூடில்ஸ் போன்ற உணவுகளைச் சுவையூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் செயற்கை சுவையூட்டிகள் பல்வேறுபட்ட தொற்றாத நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றதென கூறப்படுவதால் அது தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றின் ஊடாக முறையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு, மேற்படி தீங்கு விளைவிக்கும் சுவையூட்டிகளைத் தடைசெய்ய வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 78/2025

கௌரவ எம்.எஸ். உதுமாலெப்பை,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல் அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரித்தல்,— மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரையான புகையிரதப் பாதை மற்றும் மாத்தறையிலிருந்து கல்முனை வரையான புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதன் மூலம் மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவிலான மக்களுக்கு பயன் கிடைப்பதனால், மட்டக்களப்பிலிருந்து பொத்துவில் வரை அல்லது மாத்தறையிலிருந்து கல்முனை வரை புகையிரதப் பாதையை விஸ்தரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 79/2025

கௌரவ (திருமதி) சட்டத்தரணி ஹிருனி விஜேசிங்ஹ,— *நீர்த்தாமரை செடியின் பரவலை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழித்தல்,—* நீர்த்தாமரை அல்லது Eichhornia crassipes (Mart.) Solms என்ற அறிவியல் பெயர்கொண்டு அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவரம், தற்போது விவசாய நிலங்கள் மற்றும் சதுப்பு நிலங்கள் முழுவதுமாக பரவிச் சென்றுள்ளதாலும், இதன் துரித வளர்ச்சி வேகத்தின் காரணமாக உள்நாட்டுத் தாவரங்களையும் விஞ்சி உயிரியல் சூழல் தொகுதிக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளதாலும், இதன் விளைவாக வண்டல் மண் படிந்து நீர் வழிப் பாதைகள் மற்றும் நீர் வழிந்தோடல் என்பன தடைப்படுவதனூடாக வெள்ளப் பெருக்கு நிலைமைகள் ஏற்படுவதாலும், அன்றாட பாவனைக்கு அவசியமான நீரின் தரம் மாசடைவதாலும் நீர் மின்னுற்பத்திக்கு தடையாக அமைந்துள்ளதாலும், இரசாயன களைக்கொல்லிப் பயன்பாட்டினூடாக அவற்றை அழித்தல், அந்நீரைப் பயன்படுத்தும் நபர்களுக்கு சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துவதாலும், இதன் விளைவாக ஏற்படும் நுளம்புக் குடம்பிகளின் பெருக்கத்தின் காரணமாக யானைக்கால் நோய் மற்றும் டெங்கு நோய் போன்றவை பரவி வருவதாலும், இத்தாவரத்தை சாதகமான வகையில் கட்டுப்படுத்துதல் மற்றும் அழிப்பதனூடாக நிலையான தீர்வினை வழங்கும் பொருட்டு அரசாங்கத்தினால் அதற்கேதுவான கருத்திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல் காலோசிதமானதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 80/2025

கௌரவ இம்ரான் மகரூப்,— *கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் முஸ்லிம் மக்களின் ஜனாஸாக்களை தகனம் செய்தமை தொடர்பாக விசாரிப்பதற்கு ஆணைக்குழுவொன்றை நியமித்தல்,—* கொரோனா பெருந்தொற்று நிலவிய காலப்பகுதியில், உலக சுகாதார நிறுவனத்தின் வழிகாட்டுதல்களுக்கு முரணாக ஒருதலைப்பட்சமாகவும் வலுக்கட்டாயமாகவும் தகனம் செய்யப்பட்ட முஸ்லீம் மக்களின் ஜனாஸாக்களின் எண்ணிக்கை, அவ்வாறு தகனம் செய்யப்பட்ட ஆட்களின் பெயர்கள், முகவரிகள் போன்ற தகவல்களை விசாரிப்பதற்கும், இறந்தவர்களின் ஜனாஸாக்களை இவ்வாறு வலுக்கட்டாயமாகத் தகனம் செய்தமைக்கு ஏதுவான பின்னணி மற்றும் வலுக்கட்டாயமாக தகனம் செய்யப்படவர்களின் உறவினர்களின் மனநிலை தொடர்பாக விசாரணை செய்வதற்கும், இதற்கு உடந்தையாக இருந்து வழிகாட்டுதல் களுக்கு முரணாகச் செயற்பட்ட அரசியல்வாதிகள் உள்ளிட்ட அரசாங்க அலுவலர்கள் தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கும், ஆணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.81/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— *இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி பழங்களைப் பழுக்க வைப்பதைத் தடுப்பதற்கான வழிமுறையொன்றைத் தயாரித்தல்,—* இலங்கையின் பழச்சந்தையில் இயற்கையாகப் பழுத்த பழங்களுக்குப் பதிலாக, இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி அவற்றை செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இறக்குமதி செய்யப்படும் பழங்களையும் இரசாயனத் திரவியங்களைப் பயன்படுத்தி செயற்கையாகப் பழுக்க வைத்து விற்பனை செய்வதாலும், இப்பழங்களை பிள்ளைகள் அதிகம் உட்கொள்வதாலும், நேர்மையற்ற வணிகர்கள் இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நாட்டின் எதிர்காலத்தை அழிவுக்குட்படுத்தி மேற்கொண்டுவரும் இச்செயற்பாட்டை நிறுத்துவதற்கு உரிய வழிமுறையொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— *நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான அளவுகோலாக பிரதான செயலாற்றுகைச் சுட்டியை பயன்படுத்துவதற்கான வழிமுறையை தயாரித்தல்,—* அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் தலைவர்களை நியமிப்பதில் மூப்புரிமையை கவனத்திற்கொள்வது போன்றே அவர்களின் பிரதான செயலாற்றுகைச் சுட்டியை (KPI - Key Performance Indicator) ஒரு அளவுகோலாகப் பயன்படுத்துவதற்கான வழிமுறையொன்றை அரச சேவையில் பயன்பாட்டிற்கு கொண்டுவந்து அதற்கேற்ப நிறுவனத் தலைவர்களை நியமிப்பதற்கான பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது பிரதான செயலாற்றுகைச் சுட்டியைக் கவனத்திற் கொள்ளுதல்,— பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களின் முக்கிய செயலாற்றுகைச் சுட்டியை (KPI -Key Performance Indicator ) வருடாந்தம் மதிப்பாய்வு செய்து அவர்களுக்குப் பதவிகளை வழங்கும் போது அத்தகைய சுட்டிகளைப் கவனத்திற் கொண்டு பதவிகளை வழங்கும் முறையியலொன்றை உருவாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களை வேறு பதவிகளுக்கு நியமிக்கும்போது அவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாத்தல்,— பிரதம நீதியரசர் முதல் நீதித்துறையின் கீழ்நிலை பதவிகள் வரை பதவி வகித்தவர்களின் சுயாதீனத்தன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு அவர்கள் அப்பதவிகளை வகித்த காலம் நிறைவடைந்த நாளிலிருந்து குறைந்த பட்சம் மூன்று ஆண்டுகளுக்கு அரச சேவை, நியதிச்சட்ட சபைகள், ஆணைக்குழுக்கள், நியாய சபைகள் அல்லது வெளிநாட்டு சேவை (தூதுவர்கள் போன்ற) ஆகியவற்றின் பதவிகளுக்கு நியமிக்கப்படக்கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— அரசியல் கட்சிகளைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளுக்குரித்தான சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப் பத்திரங்களை தமது கட்சியின் நிதியத்தில் வைப்பிலிடுவதை நிறுத்துதல்,— அரசியல் கட்சிகள் தமது கட்சியின் சார்பில் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள், மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை அத்தகைய அரசியல் கட்சிகளுக்கே மீளப் பெற்றுக்கொள்வதானது மக்கள் பிரதிநிதிகள் தங்களது சுயாதீனதன்மையை இழக்கின்றதொரு செயற்பாடாகும் என்பதாலும், இது சனநாயகத்திற்கு கடும் சவாலாக கருதப்படுவதனாலும், இவ்வாறு அரசியல் கட்சிகளினால் மக்கள் பிரதிநிதிகளின் மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் வாகன அனுமதிப்பத்திரங்கள் முதலியவற்றை தமது நிதியத்தில் வைப்பிலிடுதல் கூடாதென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/2025

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேகர,— போதைப் பொருட்களுக்கு அடிமையாகி உள்ளவர்களுக்கு புனர்வாழ்வளிக்கும் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் புனர்வாழ்வளிக்கும் நிலையத்தைத் தாபித்தல்,— இன்றளவில் ஹெரோயின் போன்ற போதைப் பொருள் பாவனையாளர்களின் எண்ணிக்கையில் சடுதியான அதிகரிப்பு காணப்படுவதாலும், போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் குறித்த ஒரு பிரதேசத்தில் மாத்திரமன்றி நாடெங்கிலும் பரந்து காணப்படுவதாலும் இவர்களின் ஊடாக இவ்விடயம் மேலும் பரவி வருவதாலும், போதைப் பொருட்களுக்கு அடிமையானவர் களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிலையங்கள் நாட்டின் ஒருசில பிரதேசங்களில் மாத்திரம் காணப்படுவதானது போதைப் பொருள் பாவனையாளர்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவது பாரிய பிரச்சினையாக மாறியிருப்பதாலும், அதற்கு தீர்வினை வழங்கும் பொருட்டு குறைந்தபட்சம் ஒவ்வொரு மாவட்டத்திற்கும், அனைத்து வசதிகளையும் கொண்ட ஒரு புனர்வாழ்வளிப்பு நிலையமேனும் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையில் வன விலங்குகளை முகாமைத்துவம் செய்வதற்கு தேசியக் கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்தல்,— இலங்கை சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட உயிரியல் பல்வகைமை நிறைந்த ஒரு நாடாக கருதப்படுவதாலும், காடழிப்பு, மனிதர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக சட்ட விரோத வன விலங்கு வர்த்தகம், மனிதர்களுக்கும் வன விலங்குகளுக்குமிடையே அதிகரித்து வரும் மோதல்கள் காரணத்தினால் வருடாந்தம் வன விலங்குகளினதும் மனித உயிர்களினதும் இழப்பு பெருமளவில் இடம்பெறுவதாலும், புதிய கொள்கைகள் மற்றும் திட்டங்களின் மூலம் தேசிய வன விலங்குகள் முகாமைத்துவக் கொள்கையொன்றை வகுத்தல் நிலைபேறான அபிவிருத்தி நோக்கமாக இருப்பதாலும், அதன் மூலம் விலங்குகளின் வாழ்விடங்கள் பாதுகாக்கப்படல், மனிதனுக்கும் வன விலங்குகளுக்கும் இடையிலான மோதல்கள் குறைவடைதல் உள்ளடங்கலாக விவசாயிகளின் பொருளாதார நிலையும் சமூக வாழ்க்கைத் தரமும் மேம்படுவதாலும், அதன் பொருட்டு செயற்படுத்தக் கூடிய நடைமுறைச் சாத்தியமான நவீன கொள்கையொன்றையும் செயன்முறையொன்றையும் வகுத்து செயற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/2025

கௌரவ சுசந்த குமார நவரத்ன,— இலங்கையின் விவசாய நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்துதல்,— இலங்கையின் பொருளாதாரத்தின் முக்கியத்துவமிக்க ஒரு துறையாக விவசாயத் துறை காணப்படுவதனாலும், விவசாய நிலங்களில் சுமார் 40 % மாத்திரம் வருடாந்த உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுவதனாலும், எஞ்சிய நிலங்கள் உரிய முறையில் திட்டமிடப்படாமை, நீர் வளப் பற்றாக்குறை, தொழிநுட்ப அறிவின்மை மற்றும் நவீனமயப்படுத்தப்படாமை ஆகியன காரணமாக பயன்படுத்தப் படாமையினாலும் உற்பத்திகளின் அளவு குறைவடைவதனால் வருடாந்தம் உணவுப் பொருட்களின் இறக்குமதி மீது பாரிய பணத்தொகை செலவிடப்படுவதனாலும், விவசாய உற்பத்திகளின் வளர்ச்சியை எதிர்வரும் ஒரு சில வருடங்களில் 30% இனால் அதிகரிப்பதற்கும், இதன் மூலம் விவசாயிகளின் வருமானத்தை அதிகரிப்பதற்கும், வணிக விவசாயத்தின் பரவலாக்கத்தை அதிகரிப்பதற்கும் வழிசமைக்கும் வகையில் சகல விவசாய நிலங்களையும் ஆய்வு செய்து நிலத்தின் வகை, பயிர்களுக்கு உகந்தநிலை, நீர் மற்றும் பயிர்ச்செய்கை பற்றிய தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை தரவுத் தொகுப்பொன்றை அமைப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குமாக நிலங்களை பயனுறுதிமிக்க வகையில் பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— யாழ்ப்பாண மாவட்டத்தில் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள தீவுகளில் வாழும் மக்களுக்கான கடற் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துதல்,— யாழ்ப்பாண மாவட்டத்தில் குறிப்பாகப் பெருநிலப்பரப்பினை அண்டியுள்ள நெடுந்தீவு, நயினாதீவு, எழுவைதீவு, மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளில் வாழும் மக்கள் பல தசாப்தங்களாகப் போதிய கடற் போக்குவரத்து வசதிகள் கிடைக்காதவர்களாக இருப்பதாலும், அதன் விளைவாக, அவர்கள் பல மணித்தியாலங்களைக் கடற் பயணத்தில் செலவிடுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுவதாலும், இவ்வாறான நிலைமையில் நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள், பாடசாலைப் பணியாளர்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கி இப்பயணத்தின் போது பல அபாயநேர்வுகளை எதிர்கொள்வதாலும் “கிராமமொன்றின் அபிவிருத்தி என்பது ஒரு தேசத்தின் அபிவிருத்தியாகும்” என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை என்பதாலும் அம்மக்களுக்களுக்காக நவீன, பாதுகாப்பான, துரிதமான மற்றும் நம்பகமான கடற் போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 91/2025

கௌரவ றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையினை ஆரம்பித்தல்,— தலைமன்னார் - ராமேஷ்வரம் படகுச் சேவையை ஆரம்பிப்பதன் மூலம் குறிப்பாக இந்தியாவில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையினை அதிகரிக்க முடியும் என்பதாலும், இதன் மூலம் பொதுமக்கள் குறைந்த செலவில் தமிழ்நாட்டுக்குப் பயணித்து, அமுலிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நியாயமான விலைகளில் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்து அதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை இது இயலுமாக்கும் என்பதாலும் தலைமன்னாருக்கும் ராமேஷ்வரத்திற்கும் இடையிலான படகுச் சேவையினை ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் உடனடி நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்

பா. 92/2025

கௌரவ அரவிந்த செனரத்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துதல்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 137 இன் பிரகாரம் தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்கான பின்வரும் திருத்தங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமாக:-

**தற்போதுள்ள பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 (4) இன் முதலாம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதற்கு:—**

கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவுக்குச் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகளைப் பரிசீலிக்கும்போது பாரதூரமான நிதி மோசடிகள் அல்லது ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாக குழு தீர்மானிக்குமிடத்து, அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அத்தகைய சம்பவங்களை நேரடியாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுக்கு அல்லது பொலிசுப் பரிசோதகர் தலைமை அதிபதிக்கு குழுவினால் ஆற்றுப்படுத்தப்படலாம்.